# பலாலியில் விமானங்கள், ஹெலிகள் நடமாட்டம்:
# பாரிய தாக்குதலுக்கு படையினர் முஸ்தீபு!

University of Jaffna Library RECEIVED 1990-7-2 Periodicals Division

விலை ரூபா 3-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆடி: 4 துல் ஹஃதா: பிறை: 26 இதழ்: 151
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-07-1990

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்தில் பாரிய தாக்குதலை நடாத்து வதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் முன் ஏற்பாடுகளில் துரிதமாக இறங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஹெலிக்கொப்டர் விமானங்கள் மூலம் பலாலி இராணுவ முகாமில்படைகள்இறக்கப்பட்டு வருவதாக அவர்களின் நடவடிக்கைகள்மூலம் தெரியவருகின்றது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 6-00 மணி முதல் பலாலி விமானத் தளத்தை நோக்கி மேற்படி பதினொரு ஹெலிக்கொப்டரும் ஒரு வேவு விமானமும் தொடர்ந்து பலாலி முகாமிற்கு வந்துதிரும்பின; பின.

மேற்படி நடவடிக்கைகள் யாவும் வல்லைவெளி, சாவகச்சேரி ஊடாக நடைபெற்றுவருகின்றன. இந்நடவடிக்கையின் போதுவிமானப்படையினர்வல்லைவெளி, சாவகச்சேரி, கேரதீவு போன்ற பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரு முட்டி கருப்பநீர் 50 ரூபா!

(வடமராட்சி)

வடமராட்சியில் ஒரு முட்டி கருப்பநீர் ஐம்பது ரூபாவிற்கு விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது.

கருப்பட்டி உற்பத்திக்காகவே மக்கள் இதனை வாங்கிச் செல்கின்றார்கள்.

முன்னர் ஒரு முட்டி கருப்பநீரின் விலை ஐந்து ரூபாவாகும். (51)

## ● தமிழ்நாடு, புதுவை மாநிலங்களில்
# இன்று ஈழத்தமிழர் கொலையை
# கண்டித்து பூரண ஹர்த்தால்!

(சென்னை)

**ஈழத்தமிழர் மீது இலங்கை அரச படையினர் நடாத்தும் இனப்படுகொலையைக் கண்டித்து இன்று தமிழ்நாடு, புதுவை மாநிலமெங்கும் பூரண ஹர்த்தால் நடத்தப்படவுள்ளது.**

இக் ஹர்த்தாலுக்கான முழு ஏற்பாடுகளையும் தமிழக முதல்வர் மு. கருணாநிதியும் பாண்டிச்சேரி முதல்வர் டி. இராமச்சந்திரனும் செய்துள்ளார்கள்.

இரு மாநில அரசுகளின் பணிப்பின்பேரில் நடைபெறும் இக் ஹர்த்தாலுக்கு பல அரசியல் கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இந்த பூரண ஹர்த்தாலை யொட்டி தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் இன்று பொதுவிடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானசேவை பஸ்சேவை உட்பட பல போக்குவரத்துச் சேவைகளும் இன்று இரு மாநிலங்களிலும் ரத்துச்செய்யப்பட்டுள்ளதுடன் வழமையான அலுவல்கள் யாவும் நடைபெறமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளான மருத்துவம். நீர் விநியோகம் என்பன நடை

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் அரசின் உணவுபொருள் விநியோகம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் லட்சக்கணக்கில் அகதிகளாக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு, அத்தியாசிய உணவுப் பொருள் விநியோகத்தில் அப்பட்டமான பாகுபாடு காட்டப்படுவது உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராட்சி நேற்று முன்தினம் வெளியிட்ட உணவு விநியோக புள்ளி விபரங்களிலிருந்து புலப்படுகிறது.

அம்பாறை தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்குரிய உணவுவிநியோகம் இன்னும் முறையாக வந்து சேர்ந்த பாடுமில்லை.

கிழக்கு மாகாணத்தின் ஒரு தனிமாவட்டமான அம்பாறைக்கு மாத்திரம் கடந்த 17-ம் திகதி வரையில் 676 மெற்றிக் தொன் அரிசியும் 495 மெற்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தினமும் நடைபெறும் ராணுவ சுற்றி வளைப்பினால் மக்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

திருமலையிலுள்ள கிராமங்களில் திடீர் திடீரெனத் தினமும் இடம்பெறும் இராணுவ சுற்றிவளைப்பினால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இத்திடீர் சுற்றி வளைப்புகளின்போது குறிக்கப்பட்ட வயதுடைய ஆண்கள் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதுடன பெண்கள் இம்சைப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

இராணுவத்திற்கு உதவியாக ஊர்காவல் படையினர்கள் இச்சுற்றிவளைப்பின்போது ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

பாடசாலைகள், அரச அலுவலகங்கள் உட்பட திருகோண

[4-ம் பக்கம் பார்க்க]

## "சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இனிஒருபோதும் இணைந்துவாழமுடியாது" - யோகி

(யாழ்ப்பாணம்)

''சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இனி ஒருபோதும் இணைந்து வாழமுடியாது. இரு நாடுகளாக வேண்டிய அளவுக்குத்தான் போராட்டம் நடைபெறுகிறது. கடந்த காலங்கள் போன்று பேச்சுவார்த்தை, சொற்ப காலம் அமைதி என்ற நிலைக்கு இனி இடமில்லை.''

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற கரும்புலிகளின் அஞ்சலிக் கூட்டத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி இவ்வாறு கூறினார்.

அண்மையில் வல்வெட்டித்துறையில் வீர மரணமடைந்த கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் திரு. ஆ. மு.



இராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் பகுதியில் விமானங்கள் நோட்டம்!

(மட்டுவில்)

இரவோடு இரவாக சாவகச்சேரி மட்டுவில் பகுதிகளில் யுத்த விமானங்களும் ஹெலிக்கப்டர்களும் தாளப் பறந்து பலமுறை சுற்றி நோட்டம் விட்டது.

கடந்த புதன்கிழமை நள்ளிரவில் இப்பதற்ற மூட்டும் செயல் இடம்பெற்றது. இதனால் இப்பகுதி மக்கள் குண்டு வீச்சு இடம்பெறப்போவதாக எண்ணிக்கொண்டு பதுங்கு குழிகளைத்தேடி ஓடினர்.

சுமார் ஒரு மணி நேரம் வரை விமானங்கள் இப்பகுதியைச்சுற்றி வட்டமிட்டன. (82)

## மாங்குளம் முகாமிற்குள் ஹெலி இறங்கும் முயற்சி புலிகளால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் கடந்த புதன்கிழமை பலத்த விமான குண்டுவீச்சு தாக்குதல் இடம்பெற்றன. 3 பொம்பர்களும் ஒரு அவ்ரோவும் நான்கு ஹெலிகளும் ராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் தாக்குதலை நடத்தின.

ஹெலியை முகாமிற்குள் இறக்க எடுத்த முயற்சியை புலிகள், எதிர்த்தாக்குதல் நடத்தி முறியடித்தனர். இத்

(4ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாம் ஷெல் உரும்பிராயில் விழுந்தது

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் உரும்பிராயில் விழுந்து வெடித்துச் சிதறியது.

[4-ம் பக்கம் பார்க்க]

## வல்வைப் பகுதியில் பீரங்கி, ஷெல் தாக்குதல் பல வீடுகள் சேதம்!

(வடமராட்சி)

வல்வைப்பகுதியை நோக்கி பலாலியிலிருந்து ஆட்லறிச் ஷெல்த்தாக்குதலும் வல்வைக் கடலிருந்து பீரங்கித்தாக்குதல் இடம்பெற்றதால் பல வீடுகள் சேதமடைந்தன.

கடந்த புதன்கிழமை இரவு 9-30 மணியளவில் வல்வைக் கடலில் பாரிய குண்டு சத்தங்களும் வேட்டுக்களும் கேட்ட

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைவெல்லம், கருப்பட்டி உற்பத்தியை அதிகரிக்க பனைச்சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஏற்பட்டுள்ள சீனித்தட்டுப்பாட்டுக்கு ஈடு கொடுக்கத்தக்க வகையில் வடபகுதியில் பனை வெல்லம், கருப்பட்டி போன்றவற்றின் உற்பத்திகளை பரவலாக பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மக்களுக்குத் தேவையான பனை வெல்லத்தை வழங்க பனை அபிவிருத்திச்சபையின் பொதுமுகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்பொழுது வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் பனைவெல்ல உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

தீவுப்பகுதியிலும் பனை வெல்லம், கருப்பட்டி போன்றவற்றை உற்பத்திசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழீழ ஆய்வுநிறுவனம் இதுதொடர்பான அறிவித்தல் ஒன்றை இப்பகுதி சங்கங்களுக்கு விடுத்துள்ளது. (123)

## தமிழீழ மீட்பு நிதி கூட்டம்

(பண்டத்தரிப்பு)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பதற்கான கலந்துரையாடல் வைபவம் ஒன்று பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இன்று 20ம் திகதி வெள்ளிக்கிழமையன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை விடுதலைப் புலிகள் இயக்க பண்டத்தரிப்பு வட்டப் பொறுப்பாளர் திரு. சிவாவும், பண்டத்தரிப்பு சிற்றூர் அவையினரும் செய்துள்ளனர். (72)

## மட்டுவில் பகுதியில் 15,000 அகதிகள்!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திர மௌலீசர் வித்தியாசாலை, மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மட்டுவில் வடக்கு லூர்துமாதா கோவில், கச்சாய் புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் சனசமுக நிலையங்கள், பொது இடங்கள், வீடுகளிலும் 15,000க்கும் அதிகமான அகதிகள் தங்கி உள்ளனர்.

இவர்களில் வடமராட்சி, வசாவிளான், பலாலி, சுன்னாகம், தெல்லிப்பழை, ஏழாலை, கட்டுவன் பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் கூடுதலாக உள்ளனர். மட்டுவில் வேலுப்பிள்ளை சனசமுகநிலையத்தில் பெருந்தொகையான அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. பி. சுந்தரம்பிள்ளையும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், தென்மராட்சிப் பகுதி அகதிகள் முகாம்களில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். (54)

## சிற்றூர் அவைகள் போர்க்காலப் பணியில் ஈடுபடவேண்டும்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைகள் போர்க்களத் தேவைகளை அறிந்தும் அகதிகளின் உதவிப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபடவேண்டும். மக்களின் நன்மை கருதி சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்தவும் உணவுப் பங்கீடுகளை கண்காணிக்கவும் முன்வரவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சியில் சிற்றூர் அவை பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மேற்கு பிரதேச பொறுப்பாளர் திரு, ரீ. அத்தார் குறிப்பிட்டார்.

திரு. அத்தார் மேலும் பேசுகையில், இன்றைய சூழ்நிலைகளை சாட்டாக வைத்து பொருட்களின் விலைகளைக் கூட்டி விற்பதும் பதுக்கிவைப்பதும் நீதியற்ற செயலாகும். சிற்றூர் அவைகள் தற்போதுள்ள சூழ்நிலையில் துரிதமாக செயல்படவேண்டும் என்றார். (83)

## ஆஸ்பத்திரிக்கு ஜெனரேட்டர்

(மட்டுவில்)

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு புதிய ஜெனரேட்டர் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது

தென்மராட்சி பிரதேச சுகாதாரக் குழுவினதும், தென்மராட்சி நோயாளர் நலன்பேணு சங்கத்தினதும் முயற்சியால் இந்த ஜெனரேட்டர் இப்பொழுது சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கிடைத்துள்ளது. (82)

## விவசாயிகளுக்கு இலவச மண்வெட்டி

(மானிப்பாய்)

உடுவில் கமநல சேவை நிலையத்தினால் நவாலி, மானிப்பாய் பகுதி விவசாயிகளுக்கு மண்வெட்டிகளை வழங்கப்பட்டது.

மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில் மானிப்பாய் பகுதியில் 218 பேருக்கும், நவாலியில் 240 பேருக்கும் இவை வழங்கப்பட்டன.

## கலைஞர்களுக்கு பாராட்டு

(ஆனைக்கோட்டை)

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆதீனத்தில் இரு பெரும் இசைக் கலைஞர்களின் பணியினைப் பாராட்டி, பட்டம் அளித்துக் கௌரவிக்கப் பட்டனர்.

இணுவையூர் என். ஆர். சந்தானகிருஷ்ணன், கலைமணி திருமதி மாலினி கிருபாகரன் ஆகியோருக்கே பட்டமளித்துக் கௌரவம் வழங்கப்பட்டது.

## இளைஞர் கழகம் அகதிகளுக்கு மதியபோனம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கும் மாகியம்பதி இளைஞர் கழகம் நான்கு அகதி முகாம்களிலுள்ள 360க்கும் மேற்பட்ட அகதிகளுக்கு மூன்றுநாட்கள் தொடர்ந்து மதியபோசனம் வழங்கினர்.

மேற்படி இளைஞர் கழகம் மாகியம்பதி சூரியோதயா சனசமூகநிலைய அங்கத்தவர்கள் பொதுமக்களின் உதவியுடன் சண்டிலிப்பாய் சிறுப்பர் பாடசாலை, அளவெட்டி தெற்கு செபஸ்தியார் ஆலயம், நவாலி மகாவித்தியாலயம், ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் பாடசாலை ஆகிய நான்கு முகாம்களைச் சேர்ந்த அகதிகளுக்கே இம்மூன்று நாள் மதியபோசனத்தை அளித்தனர்.

மேலும் இவ் அகதிகளுக்கு இக்கழகம் சர்வோதயத்துடன் தொடர்புகொண்டு செய்துகொண்ட ஏற்பாடுகளுக்கு அமைய சர்வோதயம் அவர்களுக்கு தேவையான உணவுப் பொருள்கள் தொடர்ந்து இரண்டு நாட்கள் இளைஞர் கழக மூலம் வழங்கியுள்ளது. (56)

## அகதிகளுக்கு உணவுப் பார்சல்

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா மாதர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தினர் அப்பகுதியிலுள்ள அகதிகளுக்கு உணவுப் பார்சல்களை வழங்கினர்.

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து நவாலி அரசடி மகா வித்தியாலயத்திலும் அட்டகிரி பாடசாலையிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள சுமார் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவுப் பார்சல்களை வழங்கியுள்ளனர். (71)

## சுதந்திரப் போராட்டத்தில் கூட்டுறவு ஊழியருக்கு பெரும் பங்குண்டு

(காங்கேசன்துறை)

சுதந்திரப் போராட்டத்தில் கூட்டுறவு ஊழியர்களுக்கும் பெரும்பங்குண்டு என்பதை மறந்து விடலாகாது. இன்று நடைபெறும் போராட்டத்தில் அவர்களும் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் மக்களுக்கு ஆற்றக்கூடிய பணிகளை முனைப்புடன் செயற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள், பணிப்பாளர்கள், கிளைக்குழு, மகளிர்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்ட விசேட கருத்தரங்கில் தலைமை வகித்து உரையாற்றிய சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா கூறினார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''இன்றுள்ள சூழ்நிலையில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு பங்களிப்பு கடமை உணர்ச்சி என்பன இருக்க வேண்டும். கூட்டுறவு ஊழியர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கிரமமாக விநியோகிக்கவும், குறுகியகால உணவு உற்பத்திப் பொருள்களை உற்பத்திசெய்யவும் கூட்டுறவு ஊழியர்கள் முன்மாதிரியாகச் செயல்படவேண்டும்'' என்றார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவுப்பகுதி பொறுப்பாளர் திரு. மகாதேவன் பேசுகையில், கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றி துன்பப்படும் மக்களுக்கு பல வழிகளிலும் உதவவேண்டும்'' என்றார்.

வலி வடக்கு விவசாய போதனாசிரியர் திரு. வை. சுப்பிரமணியம் குறுகியகால பயிர்ச்செய்கை குறித்து விளக்கம் அளித்தார், (86)

## திருவிழா நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

காவலூர் துறைமுக அன்னை வேளாங்கன்னி திருவிழா தற்பொழுதுள்ள சூழ்நிலையில் நடைபெறவில்லை.

## விற்பனைக்கு பொருட்கள் இல்லை கடைபூட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை நவீன சந்தைக் கட்டடத்தில் இயங்கி வந்த மக்கள் கடை தற்போது மூடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மேற்கு சிற்றூரவையினரால் பொது மக்கள் நன்மை கருதி மலிவு விலையில் நடாத்தப்பட்டுவந்த இந்த மக்கள் கடையில்இருந்த உணவுப் பொருட்கள் முடிவடைந்தமையாலேயே தற்காலிகமாக கடந்த வாரம் முதல் மக்கள் கடை மூடப்பட்டுள்ளது. (139)

## இராசி பலன்

20-07-90
வெள்ளிக்கிழமை

திரயோதசி பி. ப. 12.7 வரை
மிருகசீரிடம் மு. ப. 8.48 வரை;
சித்தயோகம்; ராகுகாலம் பகல் 10.31 முதல் 12.01 வரை:
நல்லநேரம் காலை 6.01–7.31 வரை

மேடம்: எதிர்பாராத உதவி, பெரியோர் ஆசி, குடும்ப சுகம், விருந்துபசாரம்.

இடபம்: புதியநிலை, அந்தஸ்து, சுபகாரியம் மனமாற்றம்

மிதுனம்: வாக்குவாதம், எதிரிகள் தொல்லை, மனக்குழப்பம், தொழில் பாதிப்பு.

கடகம்: கண்ணியகுறைவு, அலைச்சல் மிகுதி, பணக்கஷ்டம், வேதனை.

சிங்கம்: அதிகாரிகள் பாராட்டு, தூரத்து பயணம், மாமனின் தொல்லை, மறதி.

கன்னி: பதவி மாற்றம், காரியதடை கடன்சுமை, மனக்குளப்பம்.

துலாம்: ஏமாற்றம், பொருள் கைதவறல், அந்நியர் தொல்லை, அவமதிப்பு.

விருச்சிகம்: சிறுபிணி, மக்களால் தொல்லை உறவினர் விரோதம், கவலை.

தனுசு: தன்மான உணர்வு, காரியவெற்றி நண்பர்வருகை, தொழில் சிறப்பு.

மகரம்: நோய் தணியும், பயணங்களால் நன்மை, பெரியோர் உதவி, விவாதம்.

கும்பம்: தொழில் தாராறு, கடமை தவறல் பொருள் நஷ்டம், குடும்பகவலை.

மீனம்: வீண்தகராறு, அதிகாரம், மனமாற்றம், குடும்ப சுகம்.

- ஜோஸ்யர்

## குடியிருக்க காணிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்குப் பகுதிகளில் குடியிருக்க சொந்தமான காணியில்லாதிருப்போருக்கு நலன் விரும்பிகள் பராமரிப்பில்லாதிருக்கும் கோயிற் காணிகளை கண்டுபிடித்து அவர்கள் குடியிருக்க தலா இரண்டு மூன்று பரப்பாக வழங்கிவருகின்றனர். (81)

## அகதிகளான சீவல் தொழிலாளருக்கு தொழில்வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள சீவல் தொழில் தெரிந்தவர்களுக்கு தொழில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தென்னை பனைகளில் சீவல் தொழில் செய்யத்தக்க தொழிலாளர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்திருந்தால் அவர்களுக்குத் தொழில் கொடுப்பதற்கானதிட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்து வருவதாகவும் இச்சங்கத்தினர் தெரிவித்தனர்.

## சங்கானையில் 1/4 கிலோ சீனி

(வட்டுக்கோட்டை)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 3ம் வயரத்திற்கான கொடுப்பனவாக 1/4 கிலோ சீனி வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு குடும்பத்தில் எத்தனை அங்கத்தவர்கள் இருந்தாலும் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு 1/4 கிலோ சீனியே வழங்கப்படுகிறது,

இச்சங்கத்தின் கிளைகளில் 2ம் வாரத்திற்கான பங்கீடாக 1/2 கிலோ சீனி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (139)

### உணவைப் பெருக்கிடுவீர்!

நாட்டிலே
உற்பத்திப்
பெருக்கென்றால்
அதை விடுத்து
வீட்டிலே
உற்பத்தி
பெருக்குகின்றார்

முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண்ணென்றும்
மூக்கென்றும்
கணக்கின்றி
பெறுதல்விட்டு

நெல் என்றும்
வரகென்றும்
கரும்பென்றும்
உழுந்தென்றும்
பருப்பென்றும்
கொள்ளென்றும்

உணவைப்
பெருக்கிடுவீர்
உற்பத்தி
செய்திடுவீர்

- கலைஞர் கருணாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரராசியினருக்கு அந்தஸ்து கிட்டும்
# கும்பத்திற்கு நோய் வாட்டும்
# மீனத்திற்கு மன அமைதி குன்றும்

மூன்று எண்ணுடைய கிரகம் குரு அல்லதுவியாழன். இது ஒரு முக்கியமான எண். மூன்றுகாலம் பிரம்மா விஷ்ணு, சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மூன்று குணங்கள் ஸத்த, ரஜஸ், தமஸ்; தாய், தந்தை, மக்கள் மூன்று கோணங்கள் இப்படி மூன்றுக்குரிய அம்சங்கள் எவ்வளவோ மூன்று எண் ஜோதிடத்திலும் எண்குறி இயலிலும் முக்கியமான இடத்தைப்பெற்றுள்ளது. 3லிருந்து 9 வரை உள்ள எண்களின். இடையே செல்லும் சக்தி ஓட்டத்தின் தொடக்கம் மூன்று எண்ணிலிருந்துதான் 3, 6, 9 எண்ணினுடைய வரிசையில் மூன்று எண்ணுக்கு சிறப்பான இடமுண்டு. வளர்ச்சி, பெருக்கம், உயர்ச்சி இவற்றைக் குறிக்கிறது.

புத்தம் சரணம் கச்சாமி,
சங்கம் சரணம் கச்சாமி,
தர்மம் சரணம் கச்சாமி,

என புத்தர்கள் சொல்வதும், பதி, பசு, பாசம் என சைவ சித்தாந்தியர்கள் பகர்வதும், அதன், அரி, அயன் என வேத வித்தகர்கள் விளம்புவதும், குருவின் பெருமை தத்துவத்தை மலர்ந்து வருபனவே. மூன்று சகாயஸ்தானம், அதற்கு மூன்ருன ஐந்து புத்திரஸ்தானம், அதற்கு மூன்ருனது களஸ்திரதானம் அதற்கு ஒன்பது வாக்கியஸ்தானம். அதற்கு மூன்ருனது பதினொன்று நட்புஸ்தானம், இலாபஸ்தானம், இப்படியெல்லாம் தன்மையைப் பது இந்த மூன்ரும் எண். இதனுல்தான் மூன்ரும் எண் (குரு) ஜோதிடத்திலும், எண் குறியியலிலும் (நியுமரோலஜி) முதன்மை பெற்றுள்ளது. இனி பலன்களைப் பார்ப்போம்.

## மகரம்

(உத்தராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம்முடிய)

குருபகவான் ஐந்தாவது பார்வையால் இந்த ராசிக்கு லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் தொழில் துறைகளில் நண்பர்களால் மேன்மையுண்டு. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு கிட்டும். விரோதம் பாராட்டியவர்கள் தாமாகவே முன்வந்து பழகுவார்கள். பெரும்புகழ் அந்தஸ்து கிட்டும். எழுத்துத்துறை சார்ந்தவர்களும், இசைத்துறை சார்ந்தவர்களும் முன்னேற்றமடைவர். புண்ணிய தீர்த்த யாத்திரைகள் கைகூடும். மகான்களின் தரிசனம் கிட்டும், தொழில்துறைகளில் தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் உருவாகும்.

குருபகவான் ஏழாவது பார்வையால் இந்த ராசியை சமமாக நேர்கதியில் பார்ப்பதால் வேலைவாய்ப்புக்கள் கிடைத்து மனமகிழ்ச்சி உண்டாகும். மனைவி, அல்லது மக்கள் சம்பந்தமான கவலைகள் இருந்துவரும். தொழிலில் போதிய வருமானம் கிட்டும். சகோதரர்களிடையே நிலவிய கருத்துமுரண்பாடுகள் குறைந்தாலும் ஒற்றுமை நிலவாது. தேகாரோக்கியம் அடிக்கடி தொல்லைதரும்.

குருபகவான் ஒன்பதாவது பார்வையால் இந்த ராசிக்கு மூன்ரும் இடத்தைப் பார்ப்பதால் குடும்ப வாழ்க்கையில் பாதிப்பும், கௌரவமும், அந்தஸ்தும் கிட்டும். அரசாங்க துறையினருக்கு பதவி உயர்வு உண்டு. கடதாசி விற்பனை. ஜவுளி விற்பனை செய்பவர்கள் ஆதாயமடைவர். மனக்குழப்பமுடைய அரசதுறையினருக்கு சாதகமான இடமுண்டு. மாணவர்களுக்கு வாக்கு வன்மையும் புத்திசாதுர்யமும் கல்வியில் மேன்மையுண்டு. பண வசதியில் நெருக்கடிகள் குறையும்.

## கும்பம்

(அவிட்டம் 3ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3ம் பாதம் முடிய)

குருபகவான் ஐந்தாவது பார்வையால், இந்த ராசிக்கு பத்தாம் இடத்தைப் பார்ப்பதால், வாழ்க்கைப் பாதையில் புதிய திருப்பங்கள் நிகழும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். தலைமறைவாக இருந்தவர்கள் வெளிப்பட்டு சந்தோசமாக வாழ்வார்கள். உடல் ஆரோக்கியம் நன்ருக இருக்கும். சிலருக்கு தந்தைவழிச் சொத்துக்கள் சேரும். வீடு, நிலம், வாகனம் ஆகியவற்றில் பிரச்சனைகள் எழலாம். புத்திரர்கள் மூலமாக நன்மைகள் கிட்டும். பொழுதுபோக்கு இலக்கியத் துறைசார்ந்தவர்களுக்குமேன்மைகள் கிட்டும் (குரு பகவான் ஏழாவது பார்வையால் இந்த ராசிக்கு பன்னிரெண்டாம் இடத்தைப் பார்ப்பதால், கல்விமான்கள், பத்திரிகைத் துறையினர், மதபிரசாரகர்கள், சட்டத் துறையினர், வைத்தியத்துறையினர் நல்ல முன்னேற்றமடைவர். செல்வாக்கும், கௌரவமும் உண்டு.

> **வியாழ மாற்றம்**
>
> **ராசிவாரியாக பலன்கள்**
>
> **அங்கம் 9**
>
> **ஜோஸ்யர் எழுதுவது**

குருபகவான் இந்த ராசிக்கு ஆறில் உள்ளதால் சுயமுயற்சியால் செய்யும் காரியங்களினுல், விசேட முன்னேற்றம் உண்டு. இடையிடையே மனக்குழப்பங்களும், வியாகூலமும் இருந்துவரும். பெண்களால் சிலருக்குப் பொருள் விரயங்களும் அதிகமாகும். ஒரு சில காரணங்களுக்காக மனைவி, மக்களைப் பிரிந்து வாழும் நிலை உருவாகலாம். தொழில் துறையில் தொழில் பிணக்குகள் இருக்கும். உறவினர் ஆதரவுமுண்டு.

குருபகவானின் ஒன்பதாவது பார்வையில் இந்த ராசிக்கு இரண்டாம் இடத்தைப் பார்ப்பதால், தாம் சார்ந்துள்ள தொழில் துறைகளில் ஆதாயமுண்டு. எதிர்பாராத அபிவிருத்தியும், பொருள் வரவும் கிட்டும். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்கள் அனுகூலத்தைத் தரும். அரசியல் ஈடுபாடு அமைதி நிறைந்து காணப்படும். நண்பர்களால் இருந்த தொல்லை நீங்கும்.

## மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல் உத்தரட்டாதி, ரேவதி வரை)

குருபகவானின் ஐந்தாவது பார்வையால் இந்த ராசிக்கு ஒன்பதாம் இடத்தைப் பார்ப்பதால் சுயமுயற்சியினரால் முன்னேற்றங்கள் உருவாகும். வேலைவிடயமாக வீண் அலைச்சல் ஏற்பட்டாலும் நீச்சர்களிடம் வேலைசெய்ய வேண்டிவரும். கௌரவம் உயர்வடையும். பொருளாதார சேர்க்கையுண்டு. ஆடை, ஆபரண லாபங்கள் உருவாகும். நண்பர்கள் உதவியால் தொழில் துறைகளில் முன்னேற்றமுண்டு. தீர்த்த யாத்திரை மேற்கொள்ளவும் வழியேற்படும்.

குருபகவான் ஏழாவது பார்வையால், இந்த ராசிக்கு பதினேராம் இடத்தைப் பார்ப்பதால். தனவிரயங்கள் மூலம் கஷ்ட நஷ்டங்களை சமாளிக்க வேண்டியிருக்கும். வீடு மாற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் சித்தியடைந்து உயர் கல்விபெற வாய்ப்பு உருவாகும். தொழில் போட்டிகளினுல் விரோதங்கள்எழலாம், பொறியியல் துறைசார்ந்தவர்களுக்கு அதிஸ்டங்களும் புகழும் உருவாகலாம்.

குருபகவான் ஒன்பதாவது பார்வையால் இந்த ராசியைத் திடமாக பார்ப்பதால் பொருளாதார வசதியிருந்தும் பயனற்ற செலவுகள் இருக்கும். பணநெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும்நிலை இருந்துவரும். திருமணம் நல்லமுறையில் நடக்கும். குடும்பசுகம் அமைதியாக இருக்கும் சாதனைகளின் மூலம் அதிக புகழ் உண்டாகும். செய்தொழிலின் மூலம் லாபங்கள் கிட்டும். எதிர்பார்க்கும் காரியங்களில் தடைகளும் வீண் பொருள் இழப்பும் மன அமைக்குறைவும் ஏற்படும். உறவினர் விரோதமுண்டு.

(மிகுதி நாளை)

---

# இப்படியும் நடக்கிறது

'கல்கி' எனும் தமிழக வார சஞ்சிகையை அறியாதவர்கள் - படிக்காதவர்கள் நம்மத்தியில் மிகக் குறைவு என்றே சொல்லவேண்டும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம்திகதி வெளியான 'கல்கி' இதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் அன்றைய எமது நிலைப்பாட்டை அப்படியே பச்சையாக எழுதியிருந்தது.

''பொறுத்தது போதும்; பொங்கி எழுங்கள்!'' எனும் தலைப்பில் அன்று வெளிவந்திருந்த 'கல்கி' ஆசிரியர் தலையங்கத்தில் சில முக்கியபகுதிகளை இங்கு தருகின்றேன் படித்துப்பாருங்கள்.

யாழ்ப்பாணத்தின்மீது ஸ்ரீலங்கா விமானப்படையினரின் ஹெலிகாப்டர்களும் விமானங்களும் குண்டு மழை பொழிகின்றன; ஆஸ்பத்திரிகள் அழிக்கப்படுகின்றன; பெண்கள் மடிகின்றனர்; குழந்தைகள் கொல்லப் படுகின்றனர். ஈழப்போராளிகளுடன் யுத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு அரசு ஒருபாவமும் அறியாத அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கிறது, அரக்கத்தனமாக நடந்து கொள்கிறது. 'புராணத்தில் பார்த்த கம்சனும் சமீபத்திய ஹிட்லரும் என்னிடம் பிச்சைவாங்க வேண்டும்' என்று கூறுமல் கூறுகிறது அரசு.

''போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை, புதிய யோசனைகள் என்று சொல்லிக்கொண்டே, அந்தத் திரைகளின் மறைவில், ஈழப்போராளிகளை அழித்துவிடலாம்; கொஞ்சம் அவகாசம்தான் தேவைஎன்று திட்டம் போட்டு அது நிறைவேருமல் போகவே, ஆத்திரமடைந்து இலங்கை அரசு விமானப்படையை ஏவி தமிழர்களைக் கொல்கிறது - அவர்களின் வீடுவாசல்களை அழிக்கிறது.

பாரதப் பிரதமர் நடந்து கொள்கிறவிதமோ நம் இதயத்தை உடைப்பதாக இருக்கிறது. லிபியாவைத் தாக்க ரேகன் விமானங்களை ஏவிய போதும், தென் ஆபிரிக்கா சமீபத்தில் ஸாம்பியா. ஜிம்பாப்வே போட்ஸ்வாஞ நாடுகள் மீது குண்டு மழை பொழிந்த போதும் இந்தியா காட்டிய ஆத்திரத்தைக் கூட, யாழ்ப்பாணம் மீது ஸ்ரீலங்கா அரசு நடத்திய குண்டுவீச்சையொட்டி வெளிப்படுத்தாதது, ஆச்சரியமளிப்பதுடன் வேதனையையும் உருவாக்குகிறது, கோபத்தையும் அதிருப்தியையும் வன்மையான விதத்தில் வெளிக்காட்ட வேண்டிய தருணத்தில் காட்டாமல் போவது பலவீனமாகக் கருதப்படும் என்பதை மறக்கலாமா? யாழ்ப்பாணம் வேறு நாடல்ல, இலங்கையின் ஒருபகுதியே என்பது உண்மை, ஆனுல் அங்கு மடிகிறவர்கள் தமிழர்கள்: நம் சகோதரர்கள். பாரதத்திலிருந்து அங்கேபோய்க் குடியேறியவர்கள் ஆயிரம் ஆண்டுகளாக வம்சாவழியாக இருப்பவரும் உண்டு. பிழைப்புக்காகச் சமீபகாலத்தில் சென்றவரும் உண்டு. ஈழப் பிரஜைகளான பிறகும் அவர்கள் தமிழர்களே:

''எனவே யாழ்ப்பாணத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப்படை குண்டு வீசுவதற்கும், புதுடில்லி மீது வீசுவதற்கும் அதிகமான வித்தியாசம் ஏதுமில்லை. ஸ்ரீலங்கா ராணுவத்தினரால் ஈழத்தமிழர்-பொதுமக்கள்- கொல்லப்படுவது இந்தியப் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு ஒப்பானதே.

''மத்திய அரசு, தன்னை யாரோ மூன்ருவது மனிதர் போலவும் யாரோ இரு தரப்பினருக்கிடையே உள்ள பூசலைத் தீர்த்துவைக்க மத்தியஸ்தம் செய்வது போலவும் நடந்துகொள்கிற போக்கை இனியேனும் கைவிடட்டும். இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பிரச்சனையாகக் கருதி நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, என்ன சொல்கிறீர்கள்? உண்டா, இல்லையா? என்று தட்டிக்கேட்கட்டும். அதற்கு மத்திய அரசுக்கு உரிமையுண்டு. ஆனுல் இன்றுள்ள மத்திய அரசின் ஏனோதானே மனப்பான்மை மடியவேண்டும்; வழவழ போக்கு வழித்து எறியப்படவேண்டும்......''

என்ன படித்துவிட்டீர்களா? அன்று எழுதியிருந்தாலும் இன்றும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. நமது நிலை ஒரு முடிந்த முடிவு இல்லாது இப்படியே போனுல் இன்னும் சில வருடங்களின் பின்னரும் இதே 'கல்கி' ஆசிரிய தலையங்கத்தை மீண்டும் மறுபிரசுரம் செய்யலாம்!

'ஊடுருவி'

---

வெள்ளிச் சிந்தனை

# இஸ்லாம் கூறும் ஜிஹாத்

றஸ்மி

உண்மையான விசுவாசிகள் யார் என்ருல் அல்லாஹ்வையும் அவனது திருத்தூது வரையும் விசுவாசங்கொண்டு தத்தமது ஊர்களைவிட்டும் அவர்கள் புறப்பட்டு, தத்தமது உயிர்களையும் பொருள்களையும் அல்லாஹ்வின் பாதையில் தத்தம் செய்பவர்கள் ஜிஹாத்துக் குரியவர்கள்.

தங்களுடைய சொல், செயல் கேள்வி பார்வையினுல் எங்கே அல்லாஹ்வின் கோபமும், சாபமும் தம்மீது படிந்துவிடுமோ என்று அஞ்சி நடுங்குபவர் இவர்களையே உண்மை விசுவாசிகள் என இஸ்லாம் பிரித்துக் காட்டுகின்றது.

அல்லாஹ்வின் திருப்திக்காக தமது உயிர்களையும் பொருள்களையும் தியாகம் செய்தவர்கள், செய்பவர்கள் உண்மை விசுவாசிகள் என இஸ்லாம் எடுத்துக்காட்டுகிறது.

அரபு உலகில் ஏன் இஸ்லாமிய நாடுகளில் எத்தனையோ இயக்கங்கள் உண்டு. எந்த இயக்கங்களும்ஜிஹாத்துஎன்று பெயர் சூட்டப்படவில்லை. அப்படியான எந்த இயக்கமும் பெயர்கொண்டு உருவாகவுமில்லை.

## மாதகலில் தஞ்சம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் புனித தொம்மையப்பர் தேவாலயத்தில் 212 குடும்பங்கள் வலிகாமம் வடக்கு பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக தஞ்சமடைந்துள்ளன.

---

தீவுப் பகுதி மக்கள்

# பண்ணை வீதித் தடையினுல் சிரமப்படுகின்ருர்கள்!

(புங்குடுதீவு)

யாழ். பண்ணை வீதி தடைபட்டுள்ளதினுல் தீவுப்பகுதி மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதநிலையில் பெரும் சொல்லணுத் துயரினை எதிர்நோக்கி வருகின்ருர்கள்.

மேற்படி வீதிதடைப்பட்டு சுமார் நான்கு வாரங்களுக்கு மேலாகி விட்டது. இந்தநிலையால் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத தீவுப்பகுதி மக்கள் சிரமப்பட்டு வருகின்ருர்கள்.

அராலித்துறை கடல் மார்க்கமாக தீவுப்பகுதி மக்கள் தங்கள் பயணங்களை மேற்கொண்டு வருகின்ருர்கள்.

எரிபொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் போக்குவரத்துச் சேவைகளும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதினுல் மினிவான் சேவைகளும் பெருமளவிம் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனுல் மக்கள் கால்நடையாகவும், துவிச்சக்கரவண்டிகள் மூலமாகவும், மாட்டு வண்டிகள் மூலமும் தங்களின் பிரயாணங்களைமேற்கொண்டு வருகின்றனர்.

---

## தெருக்கூத்து

(வடமராட்சி)

வடமராட்சியின் பல பகுதிகளிலும் புலிகளின் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மக்கள் எல்லோரும் ஆர்வத்துடன் இந்நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

(51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களுக்கு தற்காப்பு பயிற்சியளிக்க புலிகள் நடவடிக்கை!

(மட்டுவில்)
பொதுமக்களுக்கு தற்பாது காப்பு பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகளை தென்மராட்சிப் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் பொறுப்பாளர் திரு. பாப்பா மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

''பொதுமக்களுக்கு தற்பாதுகாப்பு பயிற்சியளிக்கும் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம்.

பொதுமக்கள் சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிடப்படும் இடத்திற்கு வந்து அந்தப் பயிற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும். 10 நாட்கள் வரை மட்டுமே இப்பயிற்சி நடைபெறும். (83)

## ஹெலித்தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவுக் கரையோரப் பகுதிகளில் அடிக்கடி இடம் பெறும் ஹெலித்தாக்குதல்கள் காரணமாக இக் கிராமத்தின் கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் அடிக்கடி பீதியடைந்து இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்த மக்களில் பலர் அல்லைப்பிட்டி, மண்கும்பான், சாட்டி ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ளனர். (123)

## வடக்கு-கிழக்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
றிக் தொன் மாவும் அனுப்பப்பட்டுள்ள அதேவேளையில் பல லட்சோப லட்சம் அகதிகளாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் பிரதேசங்களுக்கு இதுவரையில் 44 மெற்றிக் தொன் அரிசியும், 18 மெற்றிக் தொன் சீனியும், 95 மெற்றிக் தொன் மாவும் அனுப்பப்பட்டுள்ளது.

உணவு அமைச்சர் வெளியிட்ட புள்ளிவிபரங்கள் பின்வருமாறு:

**அம்பாறை:**
16-ம் திகதி வரை 536 மெ. தொன் அரிசி, 495 மெ. தொன் மா,
17-ம் திகதி வரை 140 மெ. தொன் அரிசி.

**மட்டக்களப்பு:**
18-ம் திகதி வரை
8லொறிகளில் மாவும் அரிசியும்.
12 லொறி - அரிசி
4 லொறி - சீனி

**மன்னார்:**
18-ம் திகதிவரை
8 லொறி - மெ. தொன் மா
10 ,, - ,, ,, அரிசி

**யாழ்ப்பாணம்:**
10 ம் திகதி வரை
34 மெ. தொன் அரிசி
87 மெ. தொன் மா
18 மெ. தொன் சீனி

யாழ்மாவட்டத்துக்கு பெருமளவு உணவு கப்பல், லொறிகள் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவை ஒழுங்காக வந்து சேர்ந்துள்ளதாக தெரியவில்லை,

## தேங்காய் எண்ணைக்கும் தட்டுப்பாடு

(மானிப்பாய்)
நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதியில் அத்தியாவசிய பொருள்களுக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இப் பகுதியில் உள்ள கடைகளில் சீனி, மா, தீப்பெட்டி, மண்ணெண்ணை, தேங்காய் எண்ணை போன்றவற்றிற்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது.

## ஊழியர்கள் வருகை அதிகரிப்பு

(மானிப்பாய்)
யாழ். செயலக கணக்குக் கிளைப் பகுதி வெளிமாவட்ட ஊழியர்களின் வருகையால் நிரம்பி வழிகின்றது.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக வெளிமாவட்டங்களில் பணிபுரியும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் வருகையை அடுத்தே இவ்வாறு காணப்படுகிறது.

ஊழியர்களுக்கு 1000 ரூபா காசோலை மூலமே வழங்கப் படுகிறது. (71)

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். இந்துக் கல்லூரி சென் ஜோன்ஸ் முதலுதவிப் படை மாணவருக்கான கூட்டம் இன்று காலை 9.00 மணியளவில் மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி படையிலுள்ள சகல மாணவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## வல்வைப்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
வண்ணமிருந்தன.

அதே வேளைபலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து வல்வைப்பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் வல்வைச் சிவபுர வீதி, நெடியகாடு தெணியம்பை போன்ற பகுதிகளில் விழுந்து வெடித்ததால் சிவபுர வீதியில் என். சிவராசா, எஸ். சிவலிங்கம் என்பவர்களது வீடுகளும் திருவில் பகுதியில் சி. சிவலிங்கம் என். அருமைச்சந்திரன் ஆகியோர்களது வீடுகளும் நெடிய காட்டுப்பகுதிகளில் தங்கேஸ்வரராஜா, பிரதி ராஜ் ஆகியோர்களது வீடுகள் பெரும் சேதமடைந்தன. தெணியம்பை போன்ற பகுதிகளில் ஷெல்துண்டுகள் பல வீடுகளில் வீழ்ந்துள்ளன. (51)

## மாங்குளம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
தாக்குதலின்போது புலிகள் போராளி ஜசின் (சம்மாங்குளம் வீரமரணமடைந்தார், இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணககத்தை தெரிவித்துள்ளனர்,

கடந்த செவ்வாய் நடந்த மோதலில் புலிகளைச் சேர்ந்த நந்தன், குணம், மிதுனன், ஆகியோர் வீர மரணமடைந்தனர். இம் மோதலில் படையினர் 15 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அநேக படையினர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளால் கீழ்க்காணும் ஆயுதங்கள் மீட்கப்பட்டன. ரி 56 - 1 ஒன்று, ரி 81 - 5 இரண்டு, ஏ. கே. மகசீன் 16, ஆர். பி. ஜி. ஒன்று, ஷெல் இரண்டு, 82 ஸ்ராண்டு மோட்டர் ஒன்று. 3000 ஐ. எம். ரவைகள் [illegible] துளைக்காத ஜாக்கட் 2, [illegible] டோங்கன் ஒன்று, இரு[illegible] (ஷெல்).

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## அகதிகளுக்கு உதவி தகவல் மையம்

(யாழ்ப்பாணம்)
யாழ் இந்து சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் நல்லூர் முத்திரைச் சந்தையடியில் அகதிகளுக்குகான 'தகவல் மையம்' ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட பிரதேங்களிலிருந்துவரும் அகதிகள் தமது உறவினர்களையோ அல்லது நண்பர்களையோ தவறவிட்டிருப்பின் காணாமற்போனவர் பற்றிய விபரங்களை மேற்படி மையத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

இப்படையினர் முத்திரைச் சந்திக்கு பிற மாவட்டங்களிலிருந்து வரும் அகதிகளுக்கான வழிகாட்டல், முதலுதவி முகவரிகளிலும் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (து)

## இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
யாழ் கோட்டை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரமரணமான லெப்டினன்ட் ஜிம்பிரவுனுக்கு (பராசசிங்கம் மகேந்திரம்) விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்தினர்கள். திரளான மக்கள், தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்கள் இவர் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவராவர்.

## பலாலி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கடந்த 17-ம் திகதி இரவு பலாலி இராணுவ முகாமிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு உரும்பராயில் காட்டு வைரவர் கோவிலுக்கண்மையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் விழுந்து வெடித்து சிதறியது.

சனநடமாற்றமற்ற பகுதியில் இச்ஷெல் விழுந்து வெடித்தமையால் உயிர்ச்சேதமெதுவும் ஏற்படவில்லை. (56)

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மலை மாவட்டமே இராணுவத்தின் கெடுபிடிகளால் இயங்க முடியாதிருப்பதாகத் தெரியவருகிறது. (து)

## சிங்கள மக்களும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
திரு. யோகரத்தினம் யோகி மேலும் பேசியதாவது,

'கப்டன் மில்லர் வரிசையில், கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சரித்திரம் படைத்துள்ளார்கள். இவர்களின் தியாகம் வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியது. இவர்கள் வீரம் செறிந்தவர்கள் மட்டுமல்ல, தலைவர் மீது நிறைந்த பாசம் கொண்டவர்கள்.

''ஒரே இலங்கையில் இரு இனங்களும் பாதுகாப்பாக வாழ்வதாக இருந்தால் எமது இனத்திற்குத் தனிப்படை தேவை. அப்படித் தனிப் படையை எமக்குத் தருவதற்கு அரசு சம்மதிக்கமாட்டாது. அது சாத்தியமற்றது. இத்தனை அழிவுகளுக்குப் பின்பும் அடிமைகளாக வாழத் தமிழ்மக்கள் தயாரா?

''ஸ்ரீலங்கா அரசின் சீனிதான் வேண்டும். மாதான் வேண்டும் என்ற போக்கை மாற்றவேண்டும். எமது பிரதேசத்தில் உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு காண வேண்டும். ஸ்ரீலங்கா அரசிடமிருந்து எதையும் எதிர்பார்க்கும் நிலை மாறவேண்டும்.''

மகளிர் அமைப்பைச் சேர்ந்த சித்ரா, ஆசிரியர் [illegible] உட்படப் பலர் பேசினர்.

# படையினரின் அம்பாறை மினி முகாம் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
அம்பாறையில் விடுதலை புலிகளின் பலத்த தாக்குதலின் பின் அரச படையினரின் மினி முகாம் வீழ்ச்சியடைந்தது. இம்மோதலில் விடுதலை புலிகளின் அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட இராணுவ பொறுப்பாளர் லெப்டினட் கேர்ணல் றேகன் வீரமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை அம்பாறை மாவட்ட 35ம் கிராம மினி முகாமிலிருந்து வெளியே வந்த ஸ்ரீலங்கா படையினருக்கும் விடுதலை புலி போராளிகளுக்குமிடையில் பாளையடி வேட்டையில் நேரடி மோதலில் ஏற்பட்டது.

இம் மோதலின் போதே லெப்டினட் கேர்ணல் றேகன் வீரமரணமடைந்தார். முக்கால்மணிநேரம் இடம்பெற்ற இம்மோதலில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் பலியானர். இருபடையினர் காயமடைந்தனர்.

இதனை தொடர்ந்து கடந்த செவ்வாய் அதிகாலை 2-20 மணியளவில் மினி முகாம் மீது புலிகள் பெரும் தாக்குதல் நடத்தினர், இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதாகவும் சிலர் தப்பி ஓடிவிட்டதாகவும் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாமிலிருந்து தொலை தொடர்பு கருவி ஆர். பி. ஜி. ஒன்றும் புலிகளால் மீட்கப்பட்டது.

# லெப்டினண்ட் கேர்ணல் றேகன் விடுதப் புலிகளின் முக்கிய போராட்டவீரராவர்!

[யாழ்ப்பாணம்]
அம்பாறையில் நடந்த மோதலில் வீரமரணமடைந்த அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட இராணுவ பொறுப்பாளர் லெப்டினன்ட் கேர்ணல் றேகன் (இராசையா சிற்றம்பலம்) மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அநேக தாக்குதலில் ஈடுபட்டவர். இவர் விடுதலைப் புலிகளின் முக்கிய போராட்ட உறுப்பினராவார் இவருக்கு வயது 26.

ஆரம்பத்தில் களுவாஞ்சிக் குடிப்பகுதி பொறுப்பாளராகவும் பின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளராகவும் பணியாற்றிய றேகன் இந்தியப் படையுடனான யுத்தத்தின் போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளராகப் பொறுப்பேற்றார். 1985, 86 ம் ஆண்டுகளில் கொக்கட்டிச்சோலையை கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தபோது களுவாஞ்சிக் குடி, வெல்லாவெளி முகாம்களிலிருந்து சிங்கள இராணுவம் உள்ளே நுழைய முடியாதபடி காத்து நின்றார்.

மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதலிலும் கொக்கட்டிச்சோலை - தம்பட்டை ஆகிய இடங்களில் பவல் ரக வாகனங்கள் சேதப்படுத்தப்பட்ட தாக்குதல்களிலும் இவர் முக்கிய பங்கு வகித்தார்.

இவரை உயிருடன் பிடிக்க இந்திய ராணுவம் பலதடவை முயன்று தோற்றது. மேலும் ஸ்ரீலங்கா இந்தியப் படையினர் பலதடவைகள் றேகன் தம்மால் கொல்லப்பட்டதாக பொய்ப் பிரசாரம் செய்து பெருமைப் பட்டுக்கொண்டனர்.

இயக்கத்தின் பயிற்சி முகாம்களிலும் ஏராளமான வீரர்களுக்கு இவர் பயிற்சிவகுப்புக்களை நடத்தியவர். அவர் குடும்பத்தினரும் உறவினர்களுமாக மொத்தம் 27 பேரை ஐந்து ஆண்டுகளுக்குமுன்னர் விசேட அதிரடிப்படையினரால் வெறித்தனமாக வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்நாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1983ம் ஆண்டு அப்போது தமிழக முதல்வராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழருக்கு ஆதரவான ஹர்த்தாலை அடுத்து பெரியளவில் நடைபெறும் இந்த ஹர்த்தாலுக்கு மத்தியஅரசின் அனுசரணையும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது

இன்று இன உணர்வின் தெளிப்பாடாக நடைபெறும் இந்த ஹர்த்தாலின்போது வன்செயலில் ஈடுபடாமல் அமைதியானமுறையில் ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு தமிழக முதல்வர் மு. கருணநிதி தமிழ்நாடு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (து)

## பலாலியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தனர். மேற்படி தாக்குதல்களால் வாகனப்போக்குவரத்துக்களும் சிலமணி நேரம் துண்டிக்கப்பட்டன.

இதேவேளை பலாலி விமானத் தளப்பகுதியை நோக்கி விமானங்கள் தாளப்பறக்கும் வேளைகள் கடும்தாக்குதல்கள் நடைபெற்றுவருவதும் அப் பகுதிகளிலிருந்து புகைமண்டலங்கள் வானத்தை நோக்கிச்செல்வதையும் பொதுமக்கள் அவதானிக்கக்கூடியதாக இருந்தன. (51)

### தேவை

வில்வம்பழம் விதைக்காகத் தேவைப்படுகிறது. மில்க் வைற், யாழ்ப்பாணம்.
(சி-814)

## விசேட அறிவித்தல்

கீழ்க் காணும் பொருளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக இதைப் பாவிக்கலாம்.

**அஸ்ரு மாஜறின்-** 225 கிறும் ரூபா 12-50
கழிவு 5-00
7-50

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;

**எஸ். வி. முருகேசு**
383/15, நாவலர் ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி பிரத்தியேக வைத்தியசாலைக்கு அருகாமையில்) (சி 4103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org